## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1] எந்த நாட்டின் விண்வெளி நிறுவனம் (Aerospace Industries) இந்திய கடற்படையுடன் $93 மில்லியன் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் (Naval MRSAM Deal) கையெழுத்திட்டுள்ளது?

[A] தென் கொரியா

[B] ஐக்கிய அமெரிக்கா (United States)

**[C] இஸ்ரேல்**

[D] ஜெர்மனி

- ✓ இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் (IAI) சமீபத்தில் Naval MRSAM (Medium Range Surface-to-Air Missile) அமைப்புகளை இந்திய கடற்படைக்கு வழங்குவதற்கு $93 மில்லியன் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ வான் பாதுகாப்பு அமைப்புக்கான ஒப்பந்தங்கள் இந்தியக் கடற்படை மற்றும் கொச்சி கப்பற்படையுடன் கையெழுத்தானது. ஒப்பந்தப்படி விமான பாதுகாப்பு அமைப்பு (ADS) க்கான நிரப்பு அமைப்புகளை IAI வழங்கும்.
- ✓ MRSAM என்பது இஸ்ரேலின் கடற்படை மற்றும் இந்தியாவின் கடற்படை, விமானப்படை மற்றும் தரைப்படைகளால் பயன்படுத்தப்படும் ஒரு செயல்பாட்டு விமான பாதுகாப்பு அமைப்பு ஆகும். வான்வெளி தாக்குதல், கடல் மற்றும் தரை அச்சுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு எதிராக பரந்த மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு வழங்குகிறது. மேலும் டிஜிட்டல் ரேடார், கட்டளை மற்றும் கட்டுப்பாடு, ஏவுகணை, மற்றும் மேம்பட்ட homing-seeker உடன் கூடிய interceptor போன்ற உயர்தர அமைப்புகளை கொண்டது.

2] 2019 உலக தொழுநோய் தினத்தின் (World Leprosy Day) கருப்பொருள் (Theme) என்ன?

[A] வாழ்வோம் வாழ உதவுவோம் (To live is help to live)

[B] தொழுநோயின் வீழ்ச்சி, வாழ்வின் மாற்றம் (Leprosy defeats, Life transform)

**[C] பாகுபாடு, களங்கம் மற்றும் பாரபட்சம் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவருதல் (ending discrimination , stigma and prejudice)**

[D] குறைபாடற்ற சிறுவர் மற்றும் சிறுமியர் (zero disabilities in girls and boys)

- ✓ உலகளாவிய தொழுநோய் தினம் (WLD) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி கடைசி ஞாயிற்றுக்கிழமையில் கடைபிடிக்கப்படுகிறது.
- ✓ நோய், பாகுபாடு மற்றும் களங்கத்தால் உண்டாகும் சமூக தாக்கம், மேலும் இத்தகைய எதிர்மறை செயல்களால் நோய் பரவுவதை தடுக்க எடுக்கும் முயற்சிகள் வீணடிக்கப்படுவதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் கடைபிடிக்கப்படுகிறது.
- ✓ இந்த ஆண்டு, 2019 ல், ஜனவரி 27 அன்று கடைபிடிக்கப்படுகிறது மற்றும் அதன் கருப்பொருள் (Theme) பாகுபாடு, களங்கம் மற்றும் பாரபட்சம் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவருதல் (ending discrimination , stigma and prejudice).
- ✓ தொழுநோய் (அல்லது ஹான்ஸென் (Hansen) நோய்) உலகின் பழமையான நோய்களில் ஒன்றாகும். மைக்கோபாக்டீரியம் லெப்ரா (Mycobacterium leprae) என்று அழைக்கப்படும் பாக்டீரியாவால் இந்த நோய் ஏற்படுகிறது. இது ஒரு தொற்று நோயாகும். இது நரம்பு மண்டலத்தை குறிப்பாக உடலின் குளிர்ந்த பாகங்களான கை, கால் மற்றும் முகத்தை பாதிக்கும். காற்றின் மூலமே அதிகம் பரவும் இந்நோய் நோயுற்றவருடன் ஏற்படும் நேரடித்தொடர்பின் மூலமும் நோயுயிரி சுவாசக் குழாய் வழியாக உட்செல்வதின் மூலமும் இவை பரவுகிறது. நோய்த்தொற்று உள்ள நபர் தும்மும் போதும் இருமும் போதும் கோடிக்கணக்கான தொழுநோய் நுண்ணுயிர்கள் காற்றில் பரவுகிறது. இது நாசி வழியாக உள் சென்று நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவரைத் தாக்குகிறது. இந்நோய் அனைத்து வயதினரையும் தாக்க வல்லது.

3] தேசிய மாணவர் படை (NCC) யின் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாக இயக்குனர் யார்?

**[A] ராஜீவ் சோப்ரா**

[B] நீரஜ் ஷர்மா

[C] பி எஸ் பானுபட்

[D] எஸ் கே கமத்

- ✓ Lt Gen ராஜீவ் சோப்ரா, புதுடெல்லியில் தேசிய மாணவர் படை(NCC) யின் புதிய நிர்வாக இயக்குனராக பதவி ஏற்றுக்கொண்டார். 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை ரெஜிமெண்டில்

இயற்றப்பட்ட தேசிய பாதுகாப்பு அகாடமி, கதாக்வாஸ்லா மற்றும் இந்திய இராணுவ அகாடமியின் முன்னாள் மாணவர் ஆவார்.

- ✓ NCC என்பது புதுடெல்லியை தலைமையிடமாக கொண்ட ஒரு இந்திய இராணுவ மாணவர் படை ஆகும், இது உலகின் மிகப்பெரிய சீரான இளைஞர் அமைப்பு ஆகும். அதன் குறிக்கோள் 'ஒற்றுமை மற்றும் ஒழுங்குமுறை'.

4] தேசிய உப்பு சத்தியாக்கிரக நினைவிடம் (குஜராத்) குஜராத்தின் பின்வரும் மாவட்டங்களில் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது

[A] மேசனா

[B] கெஹடா

[C] பாருச்சி

**[D] நவ்சாரி**

- ✓ ஜனவரி 30, 2019 அன்று பிரதமர் நரேந்திர மோடி, மகாத்மா காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு குஜராத்தில் நவ்சாரி மாவட்டத்தில் உள்ள தண்டியிலுள்ள தேசிய உப்பு சத்தியாக்கிரக நினைவிடத்தை தேசத்திற்காக அர்ப்பணித்தார்.
- ✓ அங்கு மகாத்மா காந்தியின் சிலைகள் மற்றும் 1930 ஆம் ஆண்டு கடல் நீரில் இருந்து ஆங்கிலேய சட்டத்திற்கு எதிராக உப்பு எடுப்பதற்காக தண்டி யாத்திரை மேற்கொண்ட 80 சத்யாகிரகிகளின் சிலைகளும் உள்ளன. மேலும் தண்டி யாத்திரையின் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் கதைகளை சித்தரிக்கும் 24 சுவரோவியங்களும் உள்ளன.
- ✓ நினைவு வளாகத்தின் மின்சார தேவைகளை பூர்த்தி செய்ய சூரியசக்தி மரங்கள் (Solar trees) நிறுவப்பட்டுள்ளன.
- ✓ இத்திட்டம் மத்திய கலாசார அமைச்சகத்திற்கு (Union Ministry of Culture) உயர் நிலை தண்டி நினைவு குழுவால் (High Level Dandi Memorial Committee (HLDMC)) பரிந்துரைக்கப்பட்டது. சர்வதேச வடிவமைப்புக் குழுவுடன் இணைந்து ஐஐடி பம்பாயால் (IIT Bombay) வடிவமைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

5] 2019 ஆம் ஆண்டு குரு பத்மசம்பவாவின் சர்வதேச மாநாடு பின்வரும் எந்த நகரங்களில் நடைபெற்றது?



Winmeen.com

[A] கோரக்பூர்

**[B] புதுதில்லி**

[C] தரம்சாலா

[D] சாஞ்சி

- ✓ ஜனவரி 29 ம் தேதி, 8 ஆம் நூற்றாண்டின், இமய முனிவர் குரு பத்மசம்பவாவின் 2 நாள் சர்வதேச மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது. மாநாட்டில் **பூட்டான் மற்றும் இந்தியா**வை சேர்ந்த இருநாட்டு அறிஞர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.
- ✓ 'பத்மசம்பாவாவின் வாழ்க்கை மற்றும் மரபுரிமை' **(Life and Legacy of Guru Padmasambhava)** என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.
- ✓ அமைதிக்கான செறிவு மையம் (Centre for Escalation of Peace (CEP) ) ஆல் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ✓ இரு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள், குரு இந்தியாவில் பிறந்தார் என்றும், பின்னர் 8 ஆம் நூற்றாண்டில் புத்தமதம் மற்றும் பௌத்த போதனைகளை இமய மலை பகுதி முழுவதும் பரப்புவதற்கு பூட்டானுக்கு சென்றார் என்றும் விவாதித்தனர்.
- ✓ இந்தியா மற்றும் பூட்டான் இடையேயான 50 ஆண்டுகால நல்லுறவிற்கு இந்த மாநாடு அர்ப்பணிக்கப்பட்டது.
- ✓ திபெத்திய புத்த மதத்தில், குரு பத்மசம்பவா பொதுவாக குரு **ரின்போச்சே(Rinpoche)** என்று அழைக்கப்படுகிறார், அதாவது "மதிப்புமிக்க தலைவன்" (precious master) என்று பொருள்படும். குரு ரின்போஹே என்பவர் முற்றிலும் அறிவொளியூட்டப்பட்ட ஒருவர், முழுமையாக விழித்தெழுந்த ஒரு புத்தர்.

6] ISRO வின் மனித விண்வெளி வானூர்தி மையம் (Human Space Flight Centre (HSFC)) எந்த நகரத்தில் தொடங்கப்பட்டது?

[A] கொச்சி

[B] சென்னை

**[C] பெங்களூரு**

[D] ஹைதெராபாத்

- ✓ ஜனவரி 30 ம் தேதி, மனித விண்வெளி வானூர்தி திட்டத்திற்காக இஸ்ரோ பெங்களூரில் உள்ள அதன் தலைமையகத்தில் மனித விண்வெளி வானூர்தி மையத்தை (HSFC) தொடங்கியது. இந்த மையம் வருங்காலங்களில் இஸ்ரோவின் மனித விண்வெளி பயண மையமாக திகழும்.
- ✓ ககன்யான் (Gaganyaan) திட்டத்தை செயல்படுத்துவது HSFC யின் பொறுப்பாகும்.
- ✓ **ககன்யான் (Gaganyaan) திட்டம்** – விண்வெளி பயண பணி திட்டமிடல், விண்வெளியில் உள்ள குழு உயிர்வாழ்விற்கான பொறியியல் அமைப்புகளின் வளர்ச்சி, பயணக்குழு தேர்வு மற்றும் பயிற்சியளித்தல் மற்றும் நீடித்த மனித விண்வெளி விமான பயணங்கள் மேற்கொள்ளுதல் போன்ற அம்சங்களை கொண்டது.
- ✓ HSFC இஸ்ரோ மையங்களின் துணைகொண்டு முதல் செயல்பாட்டு விமானத்தை வடிவமைக்கவுள்ளது.
- ✓ 75 வது சுதந்திர ஆண்டினை முன்னிட்டு ககன்யான் திட்டத்தின் கீழ், 3-பேர் கொண்ட குழுவினை 2022 க்குள் குறைந்தது 7 நாட்களுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ HSFCயின் நிறுவன இயக்குநர் டாக்டர் எஸ். உன்னிகிருஷ்ணன் (Dr. S. Unnikrishnan Nair) நாயர் ஆவார்.
- ✓ **ககன்யான்** திட்ட இயக்குனர் ஆர் ஹட்டன் (R Hutton) ஆவார்.

7] பின்வரும் நாடுகளில் எது INSTEX என்றழைக்கப்படும் ஈரான் உடனான கட்டண சேனலை அதிகாரப்பூர்வமாக நிறுவுகிறது?

[A] இத்தாலி, ரஷ்யா மற்றும் நெதர்லாண்ட்ஸ்

[B] பிரேசில், தென் ஆப்பிரிக்கா மற்றும் எகிப்து

[C] சவுதி அரேபியா, டென்மார்க் மற்றும் ஜப்பான்

**[D] ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து**

- ✓ ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து வர்த்தகத்தைத் தொடரவும் அமெரிக்க பொருளாதாரத் தடைகளை தடுக்க உதவவும் INSTEX என்றழைக்கப்படும் ஈரான் உடனான ஒரு கட்டண சேனலை அதிகாரப்பூர்வமாக நிறுவியுள்ளன.
- ✓ நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சிறப்பு கட்டண அமைப்பு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 2018 ஆம் ஆண்டில் திடீரென்று உடன்பாட்டை விட்டு விலகிய பிறகு வாஷிங்டன் மீண்டும்

பொருளாதாரத் தடைகளை விதித்த போதிலும், டெஹ்ரான் (Tehran) ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்களுடன் (EU companies) வர்த்தகம் செய்வதை அனுமதித்து ஈரான் அணுசக்தி உடன்பாட்டை காப்பாற்ற உதவும்.

✓ ருமேனியா (Romania), புக்கரெஸ்டில் (Bucharest) உள்ள ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு மந்திரிகள் கூட்டத்தில் இந்த மூன்று நாடுகளும் INSTEX கருவியை நிறுவியுள்ளன. 'இன்ஸ்டெக்ஸ்' நிறுவனம் என்பது மூன்று அரசாங்கங்களின் திட்டமாகும், மேலும் அனைத்து 28 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களின் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. The Instrument In Support Of Trade Exchanges (INSTEX) பிரான்சில் பதிவு செய்யப்பட்டு, ஜெர்மன் வங்கியாளர், முன்னாள் காமர்ஸ் பேங்க் இயக்குநர், பெர் பிஷ்ஷர் (Per Fischer) தலைமையில் இயங்கும்.

8] 200 ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை யார்?

[A] ஜெமிமா ரோட்ரிகஸ் (jemima rodrigues)

**[B] மித்தலி ராஜ் (mithali raj)**

[C] ஜுலன் கோஸ்வாமி (julan goswami)

[D] ஸ்மிருதி மந்தனா (smriti mandhana)

✓ பிப்ரவரி 1 ஆம் தேதி நியூசிலாந்துக்கு எதிரான 3 வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டிகளில் விளையாடிய போது 200 ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் முதல் பெண் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை இந்திய கேப்டன் மித்தாலி ராஜ் பெற்றுள்ளார்.

✓ இருப்பினும், அவரது 200 வது ஆட்டத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை, 28 பந்துகளில் ஒன்பது ரன்கள் எடுத்தார், இந்தியா நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி போட்டிகளில் 149 ரன்களில் தோல்வியுற்றது.

✓ ஒருநாள் போட்டிகளில் அதிகபட்சமாக ஏழு சதங்கள் உட்பட 6622 ரன்கள் என சராசரியாக 51.33 விகிதத்தில் ரன்கள் பெற்றவர் இவர். இந்திய பெண்கள் அணிக்கு 123 முறை கேப்டன் என்ற சாதனையையும் அவர் பெற்றுள்ளார்.

✓ 1999 ல் மித்தாலி தனது முதல் ஒருநாள் தொடரில் பங்கேற்றார். அவர் 10 டெஸ்ட் மற்றும் 85 T20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்திய அணி விளையாடிய 263 ஒருநாள் போட்டிகளில் இவர் 200 போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

9] புதிதாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டிற்காக துறை (Department for Promotion of Industry and Internal Trade) எந்த அமைச்சகத்தின் கீழ் இயங்கும்?

[A] தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் (Ministry of labour and employment )

**[B] வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் (Ministry of commerce and industry)**

[C] நிதி அமைச்சகம் (Ministry of finance)

[D] நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் (Ministry of consumer affairs)

- ✓ தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டிற்காக துறை (Department for Promotion of Industry and Internal Trade) , தொழில்துறை கொள்கை மற்றும் வளர்ச்சி துறை (The Department of Industrial Policy and Promotion , DIPP) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ✓ தொடக்கநிலைகள் தொடர்பான விஷயங்களைக் கையாளுதல், மற்றவர்களுடன் வியாபாரம் செய்வதை எளிதாக்குதல் போன்ற முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒரு தனி அமைச்சகத்தை அமைப்பதற்காக வர்த்தகர்களின் சபை CAIT (அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு) கோரிக்கைக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ✓ வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இத்துறை உள்நாட்டு வர்த்தகம் மற்றும் சில்லறை வர்த்தகத்தை மேம்படுத்துதல், வர்த்தகர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களின் நலன் காத்தல், எளிய முறையில் வணிகம் மற்றும் தொடக்க நிலை நிறுவனம் தொடங்க வசதிகள் செய்துகொடுத்தல் போன்ற அம்சங்களை கொண்டது.
- ✓ முன்னதாக, உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான விஷயங்கள் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகத்தின் (Ministry of consumer affairs) கீழ் இருந்தன.

10] இசை மற்றும் நடன திருவிழா 'சோபன் 2019' பின்வரும் நகரங்களில் எங்கு துவங்கியுள்ளது?

**[A] புது டெல்லி**

[B] போபால்

[C] ஜெய்ப்பூர்

[D] கான்பூர்

- ✓ பிப்ரவரி 1 ம் தேதி, இசை மற்றும் நடன விழா 'சோபன் 2019' புது தில்லி மத்திய பூங்காவில் தொடங்கியது.
- ✓ இளம் மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்கள் பாரம்பரிய கலை வடிவங்களை கற்பதற்கு ஊக்குவிப்பதற்காக நடைபெறுகிறது.
- ✓ புது டெல்லி மாநகர கவுன்சில் (NDMC) உடன் இணைந்து சாகித்ய கலா பரிஷத் மற்றும் தில்லி அரசாங்கத்தால் இந்த விழா நடத்தப்படுகிறது. இது பாரம்பரிய இந்திய கலை வடிவங்களை முன்னெடுப்பதற்கான முயற்சியாகும்.
- ✓ இந்த 6 நாள் நீண்ட திருவிழா, இசை மற்றும் நடன கலைஞர்கள் தங்களுக்கு என பார்வையாளர்களை அமைத்துக்கொள்வதற்கான சிறந்த வாய்ப்பாகும்.
- ✓ ஒடிஸி நடன கலைஞர்கள் மடுர் குப்தா மற்றும் பிரமானந்த சாகு, பாடகர் சிவம் பரத்வாஜ், தாள வாத்திய கலைஞர் அமீர் ஹுசைன் மற்றும் அமான் ஜமீல், கதக் நடன கலைஞர்கள் மிருணாளினி போன்ற இளம் கலைஞர்கள் பலர் பங்கேற்க உள்ளனர்.

winmeen.com